**24.04.2025**

**MCOP.No.198/2023**

**ம.சா. 1 : தேன் மொழி**

**<u>எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>:-**

1) நான் விபத்தை நேரில் பார்க்கவில்லை. என் கணவர் விபத்தில் இறந்துவிட்டார் என்று கேள்விபட்டு தான் பார்க்க சென்றேன் என்றால் சரிதான். திருப்பதி பர்னிசர் என்ற கடை மும்முடியில் என் கணவர் வாகனத்தை நிறுத்தி வைத்திருந்தார். அந்த கடைக்கு அருகில் மத்திய வங்கி, ATM அருகே அமைந்துள்ளது என்றால் சரிதான். மேற்படி கடைகள் சாலையின் ஓரமாக மெயின் ரோட்டில் உள்ளது என்றால் சரிதான்.

2) மெயின் ரோட்டிற்கு பக்கத்தில் தற்போது பாலம் அமைத்துக்கொண்டு வருவதால் அங்க கூட்டமாக இருக்கும் என்றால் சரிதான். சேலத்தில் இருந்து சென்னைக்கு செல்லும் பாலம் முடிந்து ஆன்சினேயர் கோவில் இறக்கத்தில் குறைந்தது 5 வேக ததைடகள் உள்ளது என்றால் சரிதான். அவ்வாறு அவ்வளவு வேக தடை உள்ளதால் அந்த வழியாக செல்லும் வாகனம் குறைவான வேகத்தில் தான் செல்லும் என்றும், அதிக வேமாக செல்ல முடியாது என்றால் சரிதான். என் கணவர் திருப்பதி பர்னிசர் கடையில் வெளியில் இருந்து வந்து வண்டியை எடுத்துக்கொண்டு தலைவாசல் - நத்தக்கரை நோக்கி சென்று கொண்டு இருந்தார் என்றால் சரிதான்.

3) என் கணவர் மீது மோதிய வாகனம் லாரி. அதன் எண் தெரியாது. என் கணவர் ஓட்டி சென்ற இரு சக்கர வாகனத்தின் எண் தெரியாது. நான் சொல்லு போல் அந்த லாரி மேற்கில் இருந்து கிழக்கு நோக்கி போய் கொண்டு இருந்த சமயத்தில் வேகமாக செல்ல முடியாது என்றும், என் கணவர் தான் வண்டியை முந்தி செல்ல முயன்றபோது எதிரே வந்த லாரியின் மோதி விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல.

4) இந்த விபத்திற்கு முழு காரணம் என் கணவரின் அஜாகிரதையும், கவனக்குறைவும் தான் காரணம் என்றும், இந்த விபத்திற்கு லாரி ஓட்டுநர் நிதானமாக

வந்து கொண்டு இருந்த சமயத்தில் விபத்திற்கு அவர் எந்த விதத்திலும் காரணம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. மேற்படி விபத்திற்கு லாரி ஓட்டுநர் மீது வழக்கு பதிவு செய்தார்கள் என்றால் சரிதான். அந்த வழக்கு குற்றவியல் நடுவர் எண். 2 நீதிமன்றத்தில் நடைபெற்றதில் நானும், என் மகன் ராம்குமார் மற்ற சாட்சிகள் சாட்சியம் அளித்தோம் என்றால் சரிதான். அதன் எண்.CC346/2023 என்றும், அந்த வழக்கின் விசாரணை முடிவில் லாரியின் ஓட்டுநர் விபத்தை ஏற்படுத்தவில்லை என்றும் அவர் குற்றவாளி இல்லை என்று தீர்மானித்து 10.09.2024 ல் விடுதலை செய்யப்பட்டுள்ளார் என்றால்அது பற்றி தெரியாது.

5) இந்த விபத்திற்கு முழு காரணம் என் கணவரின் அஜாகிரதையாலும், கவனக்குறைவாலும் காரணம் என்றும், எனவே இந்த விபத்து 1ம் எதிர்மனுதார் எவ்வித இழப்பீடும் வழங்கவேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல. இருந்தாலும் 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் மீது இழப்பீடு வழங்கும் பட்சத்தில் மேற்படி 1ம் எதிர்மனுதாரர் வாகனம் 2ம் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் காப்பீடு செய்துள்ள நிலையில் இந்த இழப்பீடு 2ம் எதிர்மனுதாரர் நிறுவனம் தான் வழங்க கடமைப்பட்டவர் என்று சொன்னால் சரியல்ல. மேலும் நான் பல்வேறு தலைப்புகளின் கீழ் கோரியுள்ள இழப்பீடு மிக அதிகமானது என்றால் சரியல்ல. எனவே 1ம் எதிர்மனுதாரர் பொறுத்து மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

2ம் எதிர்மனுதாரர் பொறுத்து குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

" என்னால்/ என் முன்பாக மேற்படி சாட்சியம் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது."

GANESAN S

Digitally signed by GANESAN S
Date: 2025.04.24 18:22:00 +0530

**Accidents Claim Tribunal, Attur.**